**அட்டவணை 19**

**<u>பயிர்ச் செய்கைப் போக இறுதியில் உர களஞ்சியசாலையை சோதனையிடுதலும் பரிசீலித்தலும் - உரங்கள் இருப்பு இணக்கல்</u>**

**(20 ஆம் அட்டவணையை பூரணப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்)**
**கமநல சேவை நிலையங்களை சோதனையிடுதலும் பரிசீலித்தலும்**

I. ஒரு கமநல சேவை நிலையத்தினால் உரங்கள் பெற்றுக் கொடுத்தல் நிறைவு செய்யப்பட்டுள்ள திகதியிலிருந்து 7 நாட்களுக்கு பின்னர் உர இருப்பு இணக்கல் செயல்முறையை ஆரம்பிக்கலாம் (இந்த 7 நாள் காலப் பகுதியினுள் நிவாரண உரங்களை பெற்றுக் கொடுக்கும் செயல்முறை, சோதனையிடுகைக்கு வசதியளிக்கக் கூடிய உர இருப்புப் புத்தகங்கள் ஆகியவற்றை பேணவும் மற்றும் களஞ்சியசாலையை தயார்படுத்தி கொள்ளவும் வேண்டும்).

II. தேசிய உர செயலக அலுவலகத்திற்கான மாவட்ட உதவிப் பணிப்பாளர், கமநல அபிவிருத்தி பிரதி ஆணையாளர்/ உதவி ஆணையாளர் அல்லது உர விடயத்திற்கு பொறுப்புடைய அபிவிருத்தி உத்தியோகத்தர் அல்லது வேறு பெயர் குறிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் ஒருவர் ஆகியோர் உள்ளடங்கும் ஒரு குழுவால் களஞ்சியசாலைகள் சோதனை இடப்பட்டு பரிசீலிக்கப்படுதல் வேண்டும்.

III. இந்த சோதனையிடுகையின் போது பரிசீலிக்க வேண்டிய புத்தகங்கள் மற்றும் ஆவணங்கள் பின்வருமாறு.

a) விவசாயிகளின் உர விண்ணப்பப்படிவங்கள் அடங்கிய கோவை (தரவு முறைமையின் ஊடாக கீழிறக்கம் செய்யப்பட்டுள்ள பட்டியல்)

b) நிவாரண உரங்கள் விநியோகப் பற்றுச்சீட்டு

c) நிவாரண உரங்கள் கிடைப்பனவு பட்டியல்

d) நிவாரண உரங்கள் இருப்புப் புத்தகம்

e) உரங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள விவசாயிகள் பற்றிய விபரங்கள் அடங்கிய OFCG 2 மாதிரிப் படிவம்

IV. விவசாயிகளின் உர விண்ணப்பப் படிவங்கள் அடங்கிய பட்டியலின் ஒரு மாதிரியை பெற்றுக் கொண்டு, குறித்த அளவான உரங்கள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளனவா என நிவாரண உரங்கள் விநியோகப் புத்தகத்திற்கு ஏற்ப பரிசீலிக்கப்படுதல் வேண்டும். அந்த பட்டியலில் விவசாயிகளின் தொலைபேசி இலக்கங்கள், கையொப்பங்கள் என்பன சரியான முறையில் காணப்படுகின்றனவா எனவும் பரிசீலிக்கப்படுதல் வேண்டும். ஒரு சில ஆவணங்களில் கையொப்பங்கள் ஒரேமாதிரியாக காணப்படக் கூடிய வாய்ப்பு இருப்பதால் கையொப்பங்கள் தன்மை பற்றி விழிப்பாக இருத்தல் வேண்டும். இந்த உர விண்ணப்பப் படிவங்கள் அடங்கிய பட்டியல், இறுதியில் விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர், விவசாய ஆலோசகர் மற்றும் கமக்காரர் அமைப்பின் உத்தரவு பெற்ற ஒரு உத்தியோகத்தர் ஆகியோரினால் கையொப்பமிடப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதா என பரிசீலிக்கப் படுதல் வேண்டும்.

V. நிவாரண உர விநியோக பற்றுச்சீட்டின் மூலம், விவசாயிகளுக்கு உரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ள அளவுகளை பரிசீலித்துக் கொள்ளலாம். இந்த அளவுகள் சரியாக, நிவாரண உரப் புத்தகங்களில் குறிக்கப்பட்டுள்ளனவா என பரிசீலிக்கப்படுதல் வேண்டும்.

VI. நிவாரண உரங்கள் கிடைப்பனவுப் புத்தகம், உரங்கள் கிடைப்பனவு (GRN) பற்றுச்சீட்டுக்களின் மூலம் பரிசீலிக்கப் படுதல் வேண்டும்.

VII. நிவாரண உர இருப்புப் புத்தகத்திலுள்ள கிடைப்பனவுகள், விநியோகங்கள் மற்றும் எஞ்சியிருக்கின்ற அளவுகள் என்பன பரிசீலிக்கப்படுதல் வேண்டும்.

VIII. பயிர்ச் செய்கைப் போக இறுதியில் நிவாரண உர இருப்புப் புத்தகங்கள் மற்றும் களஞ்சியசாலைகள் என்பன கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் கமநலக் குழு உறுப்பினர்கள் ஆகியோரினால் பரிசீலிக்கப்பட்டு சரி என உறுதிப்படுத்தப்பட்டு கையொப்பமிடப்பட்டிருத்தல் வேண்டும்.

IX. உரிய கால நேரத்திற்கு 14 மற்றும் 15 ஆம் அட்டவணைகள் கமநல சேவை மாவட்ட அலுவலகங்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளனவா என பரிசீலிக்கப்படுதல் வேண்டும்.

X. உரக் களஞ்சியசாலைகளை உரிய முறையில் முகாமை செய்வது உரிய தரப்புகளின் பொறுப்பாகும். உரங்களின் தரத்தை பாதுகாத்து விவசாயிகளுக்கு தரத்தில் உயர்ந்த உரங்களை விநியோகிக்க, உரக் களஞ்சியசாலைகளில் ஆகக்குறைந்தது கீழே குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படையான பண்புகள் காணப்படுகின்றனவா என பரிசீலிக்கப் படுதல் வேண்டும்.

a) பல உர வகைகளை தனித்தனியாக களஞ்சியப்படுத்தல்
b) ஒரு தட்டில் அல்லது பொருத்தமான ஒரு காப்பு முறையில் உர உறைகளை அடுக்கி வைத்தல்
c) நிலத்தில் விழும் உரங்களை அகற்றி சுத்தமாக வைத்திருப்பதற்கு ஒரு முறையியலை செயற்படுத்தல்
d) வெற்று உறைகளை உரக் களஞ்சியசாலைகளிலிருந்து அகற்றுவதற்கு ஒரு முறையியலை செயற்படுத்தல்
e) உரங்களை நிறுக்கும் தராசுகளை ஒவ்வொரு பயிர்ச் செய்கைப் போகத்திற்கு ஒரு தடவை இற்றைப்படுத்தி வைத்தல்
f) உரங்களை நிறுக்கும் தராசுகளுக்கான வருடாந்த அனுமதிப் பத்திரங்களை பெற்றிருத்தல்
g) இரும்பினால் செய்யப்பட்டுள்ள சகல பொருட்களுக்கும் துருப்பிடியாத நிறம் தீட்டப்பட்டிருத்தல்
h) முதலாவது களஞ்சியப்படுத்தப்படும் உரங்களை முதலில் அகற்றுவதற்கு இலகுவான முறையில் உறைகள் அடுக்கப்பட்டிருத்தல்
i) களஞ்சியசாலையில் ஒரு விளம்பரப் பலகை நிறுவப்பட்டிருத்தல் வேண்டும். உரிய பயிர்ச் செய்கைப் போக உர சிபாரிசு, உரங்கள் பாவிக்கப்படும் முறைகள் போன்ற முக்கியமான விடயங்கள் அந்த விளம்பரப் பலகையில் குறிப்பிடப்பட்டிருத்தல்.

XI. இருப்புப் புத்தகங்களும் மற்றும் களஞ்சியசாலையும் பரிசீலிக்கப்பட்டதன் பின்னர்

1) இருப்புப் புத்தகத்திலுள்ள அளவும் மற்றும் களஞ்சியசாலையிலுள்ள நிலுவையும் சமன் எனில் அது பற்றியும்

அல்லது

2) மிகையாக அல்லது குறைவாக இருப்பின் அது பற்றியும் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

மற்றும்

3) முன்கொணரப்பட்டுள்ள நிலுவையும் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

XII. பரிசீலிக்கும் குழுவால் இறுதியில் அனைத்தும் பரிசீலிக்கப்பட்டுள்ளதாக கையொப்பமிடப்பட்டு உறுதிப்படுத்தப் படுதல் வேண்டும்.

XIII. சகல களஞ்சியசாலைகளும் பரிசீலிக்கப்பட்டதன் பின்னர், 20 ஆம் அட்டவணைக்கு ஏற்ப தயாரித்த ஒரு அறிக்கை தேசிய உர செயலக அலுவலக பணிப்பாளருக்கு ஒரு பிரதியுடன் கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்திற்கும் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

XIV. சகல களஞ்சியசாலைகளும் பரிசீலிக்கப்பட்டதன் பின்னர், அடுத்த பயிர்ச் செய்கைப் போகத்தில் விநியோகிக்க வேண்டிய உரங்களின் அளவை நிர்ணயிக்கும் பொருட்டு கமநல சேவை நிலையங்களின் களஞ்சியசாலைகளில் உர நிலுவைகள் பதியப்பட்டுள்ள ஒரு அறிக்கை உரிய அரசாங்க உரக் கம்பனிக்கு/கம்பனிகளுக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.